(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **63**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 ஏப்பிறல் 06, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரி. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ திளும் அமுனுகம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டாற ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேசா விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2006, 2007, 2008, 2009, 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான பேராதெனிய தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு விடப்படல் வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்திறன் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் (3) ஆம் உப பிரிவின் கீழான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 01 ஆம் திகதிய 1947/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை: மற்றும்

(ii) காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட (52 ஆம் அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் ஈதைல் மதுசாரம் தொடர்பில் மது வரியினைத் திருத்தியமைத்தல் மற்றும் ஈதைல் மதுசார இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 மார்ச்சு 02 ஆந் திகதிய 1956/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களைச் சமர்ப்பித்தார்.

(988 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

மேற்படி பத்திரங்கள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**2 மனுக்கள்:**

(1) தணமல்வில, பலஹருவ, குடாஓய, வதிவிட பொறியியல் அலுவலகத்தில் பணி புரியும் திரு. விகும் அமரவீரவினது 2016.01.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சமல் ராஜபக்ஷ சமர்ப்பித்தார்.

(2) (i) தெவினுவர, கந்தரவத்த, கொரகஹவத்த, "சுமனசிரி" இல்லத்தில் வதியும் திரு, எச்.கே. ருவன் குமாரவினது 2016.01.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பொலன்னறுவை, ஜயந்திபுர, பெந்திவெவ, இல. 1567 இல் வதியும் திரு. எம்.ஜி.எஸ்.பி.எச். சில்வாவினது 2016.02.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) கோட்டகொட, நாவுட்டுன்ன, தலல்ல, முக்தெட்டுவெகொடவத்த, இல. 01 இல் வதியும் திருமதி எஸ்.எச். அனுலாவதீயினது 2016.01.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

(3) கடவத்த, கிரில்லவல, இல. 30 இல் வதியும் திரு, கே.பி.கே. ஆரியபாலவினது 2016.02.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3. *சட்டமூலம் கொண்டுவர அனுமதி*:** "ரஞ்சன் ராமநாயக்க பவுண்டேஷனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ எட்வட் குணசேகர பிரேரித்தார். கௌரவ எம்.எஸ். தௌபீக் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூகவலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**4. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "குல்லியத்துல் இமாம் சாபிஈ அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ எம்.எஸ். தௌபீக் பிரேரித்தார். கௌரவ எட்வட் குணசேக்கர அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "நிடா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ முஹமட் நவவி பிரேரித்தார். கௌரவ எம்.எச்.எம். சல்மான் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 2.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.50 மணிக்கு கௌரவ எட்வட் குணசேக்கர தலைமை தாங்கினார்.)

"கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக" என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.05 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.42 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 தொடக்கம் 3 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

4 ஆம் வாசகம்:

3 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியில் தொடங்கி 5 ஆம் வரியில் முடிவடையும் “பன்னிரெண்டு மாதங்களினுள்” என்ற சொற்களை நீக்கிவிட்டு” இரண்டு வருடங்களினுள்” என்ற சொற்களை இங்கு சேர்க்க வேண்டுமென நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்:

3 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியில் தொடங்கி 17 ஆம் வரியில் முடிவடையும் “2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க” என்ற சொற்களுக்கு முன்பாக “2013 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான” என்ற சொற்களை இங்கு சேர்க்க வேண்டுமென நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**பொதுவான திருத்தங்கள்:**

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் பிரேரித்த திருத்த பொதுவான திருத்தம்: சட்டமூலத்தின் தமிழ் உரையில் சில சொற்கள் மற்றும் வாக்கியங்கள், சிங்கள உரை சொற்கள் மற்றும் வாக்கியங்களுடன் பரஸ்பர வேறுபாடுகள் அல்லது குறைபாடுகளைக் கொண்டிருப்பின் அவற்றை சிங்கள உரைக்கு ஏற்ப திருத்திக் கொள்வதற்கு.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னுரை சட்டமூலத்தின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற பிரேணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விரிவுப் பெயர் சட்டமூலத்தின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற பிரேணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**7. வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரிகுழு:** கௌரவ சுனில் **ஹந்துன்னெத்தி**, கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அனுவதிக்க சமர்பித்த பிரேரணை,—

இலங்கைப் பிரசைகள் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை இருக்க வேண்டியது அடிப்படை மனித உரிமையாகுமென்பதாலும்;

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கைப் பிரசைகளுக்கு இலங்கையில் நடத்தப்படுகின்ற தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வாய்ப்பு இதுவரை கிடைக்காதுள்ளதாலும்;

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்கள், இலங்கையின் தற்போதைய பொருளாதாரத்தை பேணிக்கொண்டுநடாத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருவதன் மூலம் பெரும் பங்களிப்பை வழங்குகின்றார்கள் என்பதாலும்;

வெளிநாடுகளில் தொழில் புரிகின்றவர்கள் கௌரவமான முறையில் தொழில் புரிவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கிக் கொடுத்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகுமென்பதாலும்;

தேர்தலில் வாக்களிப்பது வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்களின் அடிப்படை உரிமையொன்றாகும் என்பதாலும்; மற்றும்

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்கள் எதிர்நோக்குகின்ற சிரமங்கள் மற்றும் அவர்களுக்கு தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் தொடர்பாக ஆராய்ந்து அது தொடர்பாக அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளுடன் கூடியதாக பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கேற்ற வகையில் பாராளுமன்ற தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) மேற்படி குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்ற நிலையியல் கட்டளை இலக்கம் 95 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு இருபத்தொரு (21) உறுப்பினர்களை விஞ்சாத எண்ணிக்கையை கொண்டிருத்தல் வேண்டும்.

3. மேற்படி குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை தீமானிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கு, பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் தோற்றுமாறு எந்தவொரு ஆளுக்கும் கட்டளையிடுவதற்கும், அத்தகைய ஆட்கள் வசம்

அல்லது கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற ஏதேனும் கடிதம், புத்தகம், அறிக்கை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சியாளர்களை வாய்மொழி மூல விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் உண்மைத்தன்மையினை விசாரித்தறிவதற்கு அல்லது வேறு விதத்தில் உறுதி செய்து கொள்வதற்கும், குழுவின் தவிசாளர் அல்லது குறித்த பணிக்காக விசேடமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஆளொருவரால் உறுதிப்பிரமாணம் அல்லது சத்தியப்பிரமாணம் பெறப்பட்ட சாட்சியாளர்களை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவி புரிவதற்கென ஏற்புடைய துறைகளின் வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுவதற்கும்; மற்றும்

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து கூட்டங்களை நடாத்திச் செல்வதற்கும்;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

4. குழுவானது, தனது முதலாவது கூட்டம் நடத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தினால் தொடர்ந்தும் வழங்கப்படும் வேறு எந்தவொரு காலகட்டத்தினுள்ளும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். (பா. 152/’15)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் நடத்தைப் போக்கு)**: “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 7.05 மணிக்கு 2016 மார்ச்சு மாதம் 08 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2016 ஏப்பிறல் மாதம் 07 ஆம் திகதிய வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.